සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

නාට්‍ය හා රංග කලාව I
நாடகமும் அரங்கியலும் I
Drama and Theatre I

58 T I

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

4524

சுட்டெண் : ..............................

| பகுதி I | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி **I** இலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், அதனை பகுதி **II** இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.
* பகுதி **II** இல் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

* **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
* இப்பகுதியில் **1** தொடக்கம் **40** வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**1.** நாடகக் கலையின் பிரதான நோக்கம்
(1) பார்ப்போருக்கு அறிவையும் ஞானத்தையும் ஏற்படுத்துதல்
(2) பார்ப்போரிடையே ரச உணர்வை ஏற்படுத்துதல்
(3) மேடையில் சம்பவங்களைச் செய்துகாட்டுதல்
(4) கலைஞர்களின் பிரத்தியேக ஆற்றலைக் காட்டுதல்
(5) பார்ப்போருக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துதல் (......)

**2.** அரங்கு என்பது பற்றிய பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - அரங்கு என்பது ஒரு நிறுவனமாகும். B - அரங்கு என்பது ஒரு இடமாகும்.
C - அரங்கு என்பது ஒரு கலையாகும். D - அரங்கு என்பது ஒரு கருவியாகும்.
E - அரங்கு என்பது ஒரு நாடகமாகும்.
இவற்றுள் சரியான கூற்றுகள் யாவை?
(1) A, B, C, D (2) A, B, C, E (3) A, B, D, E
(4) A, C, D, E (5) B, C, D, E (......)

**3.** பின்வருவனவற்றுள் காவிய நாடகக் கட்டமைப்புப் பண்புகளில் **உள்ளடங்காதது**
(1) எடுத்துரைக்கும் பண்பு (2) செயன்முனைப்புடைய பார்ப்போர்
(3) பார்ப்போர் உணர்ச்சி வசப்படுதல் (4) கதையில் சம்பவக்கோவை
(5) கதை காரண காரிய ரீதியான தாக்கத்தினைக் கொண்டிராமை (......)

**4.** பின்வருவனவற்றுள் நாடகத்துக்கு முதன்மையானதாக அரிஸ்டோட்டில் எதனைக் குறிப்பிடுகின்றார்?
(1) பாத்திரம் (2) சிந்தனை (3) நாடகச் செயல்
(4) சொல்லாடல் (5) பெருங்காட்சி (......)

**5.** கதைப்பின்னல் என்பது,
(1) கதையைச் சுருக்கிச் சொல்லுதலாகும். (2) சம்பவங்களின் ஒழுங்கமைப்பாகும்.
(3) காட்சிக் கோர்வையாகும். (4) ஒரு வரியில் கதையைச் சொல்லுதலாகும்.
(5) கதையை விரித்துச் சொல்லுதலாகும். (......)

**6.** நாடக நெறியாளரின் பிரதான பணிகளுள் ஒன்று
(1) அளிக்கையின்போது வசனங்களை எடுத்துரைத்தல்
(2) தேவையான இடத்தைத் தெரிவு செய்தல்
(3) நடிபாகத்தைத் தெரிவு செய்தல்
(4) அனுமதிச் சீட்டுக்களை விநியோகம் செய்தல்
(5) நாடகத்தை முகாமைத்துவம் செய்தல் (......)

**7.** அமைதியான மனநிலையையும் தியானம் எனப்படும் திருப்தியையும் குறிப்பிடும் அழகியல் அனுபவம்,
(1) ரஸம் எனப்படும். (2) யூஜின் எனப்படும். (3) கதாசிஸ் எனப்படும்.
(4) லோகதர்மி எனப்படும். (5) கழிவிரக்கம் எனப்படும். (......)

[பக். 2 ஐப் பார்க்க

**8.** சாகுந்தலம் நாடகத்தில் கணையாழி கிடைக்கும் சந்தர்ப்பம், ஐவகைச் சந்திகளில் எதனைக் காட்டுகின்றது?
(1) யத்ன (2) ஆரம்ப (3) பலாகமம்
(4) பிராரப்தி (5) நியதாப்தி (......)

**9.** பின்வருவனவற்றுள் நடிகரின் கற்பனை பற்றிய மிகச் சரியான கூற்று எது?
(1) காரண காரியத்தைக் கொண்டிராது. (2) நம்பகத்தன்மையற்றது.
(3) வெளிவாரியான படைப்பாக்கப் பணியாகும். (4) காண்பியப் படிமங்கள் நிறைந்தது.
(5) அறிவுரீதியாகச் சிந்திப்பது. (......)

**10.** பின்வரும் உணர்வுகளைக் கருதுக.
A - பயம் B - கூச்சம் C - பதற்றம்
D - மனவிறுக்கம் E - இரக்கம் F - உற்சாகம்
மேலுள்ளவற்றுள் நடிப்பு வெளிப்பாட்டுக்கான **தடையாகக்** கொள்ளப்படத்தக்கவை யாவை?
(1) A, B, C, D (2) A, C, D, E (3) B, C, D, E
(4) B, C, E, F (5) C, D, E, F (......)

**11.** "பார்ப்போரின் முன்னிலையில் நின்று பணியாற்றுகிறேன் என்பதை நடிகர் அறிந்திருப்பினும், அவர் பார்ப்போர் பற்றி எதுவும் உணராதவர் போன்று மேடையில் தன் பணிகளைச் செய்ய வேண்டும்" எனக் குறிப்பிட்டவர்
(1) மேயர் ஹோல்ட் (2) குறொட்டொவ்ஸ்கி (3) ஸ்ரனிஸ்லாவ்ஸ்கி
(4) பேட்டோல்ட் பிறெ.்ட் (5) ஒகஸ்தாபோல் (......)

**12.** பின்வருவனவற்றுள் சாதாரணர்களது வாழ்க்கையை மையப்படுத்திய இயல்பு நெறிவாத, யதார்த்தவாத நாடகங்கள் தொடர்பான **பொருத்தமற்ற** கூற்று எது?
(1) பாத்திரங்களின் பல்வகைப்பட்ட பண்புகளை நுட்பமாக அவதானிக்கும்.
(2) வாழ்வியல் துன்பங்களை அசையவிடும்.
(3) பாத்திரத்தின் நுண்ணிய இயல்புகளை அபிநயிக்கும்.
(4) பாத்திரத்தின் குணங்களைக் காட்சிகளில் மோடிமைப்படுத்தும்.
(5) பாத்திரங்களை உயிர்த்துடிப்புடன் படைக்கும். (......)

**13.** தனது நாடகங்களை 'பிளேய்ஸ்' (Plays) எனக் குறிப்பிடும் நாடகாசிரியர் யார்?
(1) அன்ரன் செக்கோவ் (2) சேக்ஸ்பியர் (3) ஹென்றிக் இப்சன்
(4) ஈஸ்கிலஸ் (5) பேட்டோல்ட் பிறெ.்ட் (......)

**14.** ஆங்கிக, சாத்வீக அபிநயம் வழியாக வெளிப்படுவது
(1) நிருத்தம் (2) தர்மி (3) நிருத்தியம் (4) நாட்டியம் (5) வர்ணம் (......)

**15.** தூர தேசத்துக்குச் செல்வதைக் காட்டுவதற்காக மேடையைச் சுற்றி நடத்தல் எனும் முறையைக் குறிப்பது
(1) கூத்து மரபு (2) நாட்டிய தர்மி (3) இசை நாடகம்
(4) லோக தர்மி (5) பரதம் (......)

**16.** பின்வருவனவற்றுள் ஒரு நடிகர் பிறிதோர் ஆளாவது தொடர்பில் சரியானது
(1) நடிப்பு (2) பாத்திரமாக மாறுதல் (3) செய்து காட்டுதல்
(4) பாத்திரச் சித்திரிப்பு (5) போலச்செய்தல் (......)

**17.** நாடகப் பாத்திரமொன்றுடன் தொடர்புடைய பின்வரும் விடயங்களைக் கருதுக.
A - நடிப்பு B - உரையாடல் C - வேட உடை
D - ஒப்பனை E - ஒளி விதானிப்பு F - மேடை விதானிப்பு
மேலுள்ளவற்றுள் ஆஹார்ய அபிநயத்துள் அடங்குவன
(1) A, B, C, D (2) A, C, D, E (3) B, C, D, E
(4) B, C, E, F (5) C, D, E, F (......)

**18.** ஆடல் ஒழுங்கமைப்பு (Choreography) என்பது,
(1) காட்சிகளை வடிவமைப்பதாகும். (2) லயங்களையும் அசைவுகளையும் ஒழுங்குபடுத்துவதாகும்.
(3) நடிப்பை மெருகூட்டுவதாகும். (4) அசைவை வரையறுப்பதாகும்.
(5) காட்சிப்பொருட்களை வடிவமைப்பதாகும். (......)

**19.** சமஸ்கிருத அரங்க மரபில் அனுகரணம் பின்வருவனவற்றுள் எதனைக் குறிக்கும்?
(1) உபரூபகம் (2) சாத்வீகம் (3) ஊமம்
(4) போலச் செய்தல் (5) முகபாவம் (......)

**20.** பின்வருவனவற்றுள் ஒடுக்கப்பட்டோருக்கான அரங்கு தொடர்பில் **பொருத்தமற்ற** கூற்று யாது?
(1) ஒடுக்கப்பட்டோரின் பிரச்சினையைக் கொண்டிருக்கும்.
(2) ஒடுக்கப்பட்டோரை விழிப்படையச் செய்யும்.
(3) ஒடுக்கப்பட்டோரைப் பங்குகொள்ள வைக்கும்.
(4) ஒடுக்கப்பட்டோரைச் சிந்திக்கத் தூண்டும்.
(5) ஒடுக்கப்பட்டோருக்குத் தீர்வுகளைப் போதிக்கும். (......)

More Past Papers at
tamilguru.lk

[பக். 3 ஐப் பார்க்க

21. 'வெறுவெளி' (Empty Space) எனும் எண்ணக்கருவினை அரங்கில் அறிமுகப்படுத்திய மேலைத்தேய அரங்கவியல்லாளர்
(1) ஆட்டுவாட் (2) பீற்றர் புறூக் (3) மேயர் ஹோல்ட்
(4) ஒகஸ்தாபோல் (5) றிச்சர்ட் செக்னர் (......)

22. அன்டிகனி நாடகத்தில் "தந்தை எந்தவாறோ மகளும், உணர்ச்சிப்பிளம்பு, மூர்க்க வெறி..." என்ற கூற்றைக் கூறுபவர்
(1) குழுத்தலைவன் (2) செய்தியாளன் (3) கிறியோன்
(4) ஹேமன் (5) தைரீசியஸ் (......)

23. சமஸ்கிருத அரங்கில் நாடகம் பார்ப்போர் ஆற்றுவோரோடு மானசீகமாக இணைந்து கொள்ளும் முறை,
(1) அனுகரணம் எனப்படும். (2) மிமேசிஸ் எனப்படும். (3) அகோன் எனப்படும்.
(4) சஹிருதயா எனப்படும். (5) கதாசிஸ் எனப்படும். (......)

24. நடிகர் தனது பாத்திரத்தைச் சித்திரிக்கும் முறைகள் பற்றிக் கூறும் 'An actor Prepares' என்ற நூலின் ஆசிரியர்
(1) ஸ்ரனிஸ்லாவ்ஸ்கி (2) குறொட்டொவ்ஸ்கி (3) அரிஸ்டோட்டில்
(4) ஹென்றிக் இப்சன் (5) எமிலிசோலா (......)

25. உணர்ச்சிகள் உடலில் வெளிப்படுத்தப்படுவதை பரதர் 'ரஸம்' என்பார். இதனைத் தொல்காப்பியர் எவ்வாறு குறிப்பிடுவார்?
(1) கதாசிஸ் (2) அனுபவம் (3) சுவை
(4) கழிவிரக்கம் (5) மெய்ப்பாடு (......)

26. விமர்சிப்பு ரீதியான விழிப்பு நிலையினைப் பார்ப்போரிடத்தில் தோற்றுவித்த அரங்கவியலாளர்
(1) ஒகஸ்தாபோல் (2) அன்டோனின் ஆர்த்தோ (3) பேட்டோல்ட் பிறெ.்.ட்
(4) ஹென்றிக் இப்சன் (5) சோபோக்கிளிஸ் (......)

27. "பெருங்காட்சி என்பது அரங்கின் கட்புலனாகும் தன்மை" எனக் குறிப்பிட்டவர்
(1) பரதர் (2) ச.து.சு. யோகியார் (3) ஸ்ரனிஸ்லாவ்ஸ்கி
(4) அரிஸ்டோட்டில் (5) குறொட்டொவ்ஸ்கி (......)

28. பின்வரும் அரங்கவியலாளர்களைக் கருதுக.
A - பீற்றர் புறூக் B - மேயர் ஹோல்ட்
C - யூஜினோ பாபா D - ஸ்ரனிஸ்லாவ்ஸ்கி
E - குறொட்டொவ்ஸ்கி F - றிச்சட் செக்னர்
இவர்களுள் அரங்கு ஏற்கனவே இழந்துவிட்ட சடங்கின் மூலகங்களை மீள் அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் செயற்பட்ட அரங்கவியலாளர்கள் யாவர்?
(1) A, B, C, D (2) A, B, D, E (3) A, C, E, F
(4) B, C, D, E (5) C, D, E, F (......)

29. காட்சிவிதானிப்பாளரின் பணிகளுள் ஒன்று
(1) காட்சிகளையும் மேடைப் பொருட்களையும் ஒழுங்கமைத்தல்
(2) நாடகத்தை நெறியாள்கை செய்தல்
(3) ஒலி, ஒளியை விதானித்தல்
(4) நடிகர்களுக்குப் பயிற்சி வழங்குதல்
(5) நடிகர்களைத் தெரிவுசெய்தல் (......)

More Past Papers at
tamilguru.lk

30. நாடகக் காட்சியொன்றில் ஒரு நடிகர் பேசும்போது மற்றைய நடிகர்,
(1) குறுக்கே பேசாதிருக்க வேண்டும். (2) நினைவூட்டுனரைக் கவனிக்க வேண்டும்.
(3) பார்ப்போரை அவதானிக்க வேண்டும். (4) நெறியாளரை அவதானிக்க வேண்டும்.
(5) தனது உடலால் வேண்டிய பதிற்குறிகளைக் காட்ட வேண்டும். (......)

31. ஒத்தெல்லோ நாடகத்தில் "ஒருவருமில்லை இக் கொலையை நானே இழைத்துக் கொண்டேன், விடைபெறுகிறேன்" எனக் கூறும் பாத்திரம்
(1) ரோடரிகா (2) ஒத்தெல்லோ (3) கசியோ
(4) டெஸ்திமோனா (5) எமிலியா (......)

32. 'குரவை' எனும் ஆட்ட முறையின் பண்புகளுள் மிகப் பிரதானமானது
(1) ஆணும் பெண்ணும் இணைந்து ஆடுவது (2) குலவை ஒலி இடையிடையே எழுப்பப்படுவது
(3) வட்டமாகக் கைகோர்த்து ஆடுவது (4) சடங்கின் மூலங்களைக் கொண்டிருப்பது
(5) பெண்கள் மட்டுமே ஆடுவது (......)

33. நடிப்பில் வேடமுகத்தின் தொழிற்பாடு பற்றிய மிகச் சரியான கூற்று, அது
(1) நடிகரின் முகத்தை மறைப்பதற்குப் பயன்படும்.
(2) அளிக்கைக்கான பிரதான சட்டகம் அல்லது தோற்றத்தை வழங்கப் பயன்படும்.
(3) விகாரத் தன்மையினை வெளிக்கொணர்வதற்குப் பயன்படும்.
(4) சிரிப்பை உண்டுபண்ணுவதற்குப் பயன்படும்.
(5) ஆடை அணிகளுக்கு ஏற்றதாகப் பயன்படுத்தப்படும். (......)

[பக். 4 ஐப் பார்க்க

**34.** நடிப்பின்போது நடிகர் தனக்குத்தானே பேசிக்கொள்வது,
(1) புறச்சொல் எனப்படும். (2) ஆகாயக் கிளத்தல் எனப்படும். (3) தனிமொழி எனப்படும்.
(4) தன்கூற்று எனப்படும். (5) அகமொழி எனப்படும். (......)

**35.** கூத்தில், பாட்டு முறையில் பாத்திர ஊடாட்ட வெளிப்பாடுகளைக் காட்டுவது,
(1) தொகையறாவிலாகும். (2) விருத்தத்திலாகும். (3) கொச்சகத்திலாகும்.
(4) காப்பிலாகும். (5) தருவிலாகும். (......)

**36.** இப்படம் சுட்டும் நடிகர் எந்த அரங்கிற்குரியவர்?
(1) கபுக்கி அரங்கு
(2) 'நோ' அரங்கு
(3) யக்ஷகான அரங்கு
(4) பீகிங் ஒபேறா அரங்கு
(5) புன்றக்கு அரங்கு



(......)

**37.** இப்படத்தில் காட்டப்பட்டுள்ள அரங்கவியலாளர்
(1) பீற்றர் புறூக்
(2) அன்ரொயின் ஆட்டுவார்ட்
(3) யூஜினோபாபா
(4) அயனஸ்கோ
(5) றிச்சர்ட் செக்னர்




(......)

**38.** இப்படத்தில் காட்டப்பட்டுள்ள உடையமைப்பு,
(1) தென்மோடிக்குரியது.
(2) வடமோடிக்குரியது.
(3) கோவலன் கூத்துக்குரியது.
(4) தெருக்கூத்துக்குரியது.
(5) கதகளிக்குரியது.




(......)

**39.** இப்படத்திலுள்ள ஈழத்துத் தமிழ்நாடக நடிகர்
(1) அரசையா
(2) பிரான்சிஸ் ஜெனம்
(3) பூந்தான் ஜோசப்
(4) ஏ.ரி. பொன்னுத்துரை
(5) வி.வி. வைரமுத்து



(......)

**40.** இப்படத்தில் காட்டப்பட்டுள்ள அரங்கவெளி,
(1) கிரேக்கத்திற்குரியது.
(2) உரோமுக்குரியது.
(3) இங்கிலாந்திற்குரியது.
(4) இந்தியாவுக்குரியது.
(5) எகிப்திற்குரியது.



(......)

* *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

නාට්‍ය හා රංග කලාව I
நாடகமும் அரங்கியலும் I
Drama and Theatre I

58 T I

4524

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

※ பிரிவு **A** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பிரிவு **B** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

### பிரிவு A

1. அரங்கு பண்பாட்டின் அடியாக மேற்கிளம்புவதாகும்.
   (i) அரங்குக்கும் பண்பாட்டுக்குமான தொடர்பினைத் தெளிவுபடுத்துக. (05 புள்ளிகள்)
   (ii) பாரம்பரிய அரங்கும் நவீன அரங்கும் எத்தகைய பண்பாட்டுச் சூழமைவுகளிலிருந்து மேற்கிளம்புகின்றன என்பதையும் அவற்றின் குறிக்கோள்களையும் எடுத்துக்காட்டுக. (10 புள்ளிகள்)

2. நவீன அரங்கில் செய்வதை 'நடிப்பு' (Acting) என்கிறோம். பாரம்பரிய அரங்கில் செய்வதை 'ஆற்றுகை' (Performance) என்கிறோம்.
   (i) நடிப்பு, ஆற்றுகை ஆகிய எண்ணக்கருக்களை ஒப்பிடுக. (05 புள்ளிகள்)
   (ii) நீர் பார்த்த அல்லது ஈடுபட்ட பாரம்பரிய அரங்கிலும் நவீன அரங்கிலும் பெற்ற அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு நடிப்பையும் ஆற்றுகையையும் உதாரணம் தந்து விளக்குக. (10 புள்ளிகள்)

3. பின்வரும் ஆற்றுகை வெளிகள் ஒவ்வொன்றிலும் ஆற்றுவோர் - பார்ப்போர் இடையிலான ஊடாட்டம் எவ்வகையில் அமையும் என்பதனை விளக்குக.
   (i) வட்டக்களரி
   (ii) படச்சட்டமேடை
   (iii) சூழலியல் அரங்கு (03 × 05 = 15 புள்ளிகள்)

### பிரிவு B

4. (i) அரங்கின் பிரதான மூலகங்கள் **ஐந்தினைக்** குறிப்பிடுக. (05 புள்ளிகள்)
   (ii) நீர் (i) இல் குறிப்பிட்டவற்றுள் எவையேனும் **இரண்டு** மூலகங்கள் அரங்கில் எவ்வாறு தொழிற்படுகின்றன என்பதனை உதாரணங்களுடன் எடுத்துக்காட்டுக. (10 புள்ளிகள்)

5. (i) **அபசுரம்** நாடகத்திலுள்ள பிரதான **மூன்று** செயல்களை இனங்காண்க. (05 புள்ளிகள்)
   (ii) ஒரு நெறியாளர் மேலே (i) இல் குறிப்பிட்ட செயல்களை சமகாலத்துக்கு உரிய வகையில் எவ்விதம் நெறியாள்கை செய்யலாம் என்பதனை விளக்குக. (10 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.
   (i) கீர்த்தனை நாடகம்
   (ii) நகைச்சுவை நாடகம்
   (iii) தெருவெளி அரங்கு
   (iv) அரங்கில் மருட்கை (Illusion)
   (v) குளுத்திச் சடங்கு (03 × 05 = 15 புள்ளிகள்)

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

**ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**
**Department of Examinations, Sri Lanka**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

| | | |
|---|---|---|
| නාට්‍ය හා රංග කලාව II<br>நாடகமும் அரங்கியலும் II<br>Drama and Theatre II | 58 T II | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>*Three hours* |

4524

சுட்டெண் : ................................

| | |
|---|---|
| பகுதி I<br>மொத்தப் புள்ளிகள் | |

**அறிவுறுத்தல்கள் :**

✻ பகுதி **I** இலுள்ள **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், பகுதி **II** இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.

✻ பகுதி **II** இல் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

✻ **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.

✻ **1** தொடக்கம் **40** வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**1.** நடிகமணி வி.வி. வைரமுத்துவின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர்
(1) ஏ.ரி. பொன்னுத்துரை (2) சு. வித்தியானந்தன் (3) காரை செ. சுந்தரம்பிள்ளை
(4) ஸ்ரீகணேசன் (5) அரியாலையூர் செல்வம் (......)

**2.** இரவீந்திரநாத்தாகூரின் நாடகங்களின் மூலமொழி
(1) உருது (2) சமஸ்கிருதம் (3) தெலுங்கு
(4) கன்னடம் (5) வங்காளி (......)

**3.** எதிர் - அரிஸ்டோட்டேலிய அரங்க மரபினை வளர்த்தெடுத்த லத்தீன் அமெரிக்க அரங்கவியலாளர்
(1) ஒகஸ்தாபோல் (2) மேயர் ஹோல்ட் (3) பீற்றர் புறூக்
(4) றிச்சட் செக்னர் (5) ஸ்ரெனிஸ்லாவ்ஸ்கி (......)

**4.** தமிழ்நாட்டின் முக்கிய நாடக இயக்குனர்களில் ஒருவரான வேலுசரவணனின் நாடகக்குழு
(1) நிஜநாடகம் (2) பல்கலை அரங்கம் (3) ஆழி
(4) மரப்பாச்சி (5) சென்னைக் கலைக்குழு (......)

**5.** சிங்கள நாடக அரங்கில் 'டவர்ஹோல்' நாடக மரபாகக் கொள்ளப்படுவது
(1) நாடகம (2) கோலம் (3) நூர்த்தி
(4) கொட்டகை மரபு (5) மினர்வா (......)

**6.** திருவெம்பாவையுடன் தொடர்புபட்ட சங்ககாலச் சடங்கரங்கு
(1) வேலன் வெறியாட்டு (2) களவேள்வி (3) வேட்டுவவரி
(4) தைநீராடல் (5) குன்றக்குரவை (......)

**7.** இலங்கைத் தமிழ் நாடக மரபில் பெரிதும் பேசப்பட்ட 'மண்சுமந்த மேனியர்', 'உயிர்த்த மனிதரின் கூத்து' ஆகிய நாடகங்கள்
(1) அரசியல் நாடகங்கள் (2) நகைச்சுவை நாடகங்கள் (3) இலக்கிய நாடகங்கள்
(4) மொழிபெயர்ப்பு நாடகங்கள் (5) கல்வியியல் நாடகங்கள் (......)

**8.** இலங்கையில் தமிழ் வானொலி நாடகத்தின் முதல் தயாரிப்பாளர்
(1) கா. சிவத்தம்பி (2) ஜோர்ஜ் சந்திரசேகரன் (3) அ.ந. கந்தசாமி
(4) சானா சண்முகநாதன் (5) நாவற்குழியூர் நடராஜன் (......)

**9.** சங்ககாலத்தில் பொருநர் பயன்படுத்திய வாத்தியம்
(1) யாழ் (2) முரசு (3) முழவு (4) கோடு (5) கிணை (......)

**10.** இந்தியாவில் வங்காளத்தில் பாரம்பரியமாக ஆடப்படும் நாடகம்
(1) யாத்ரா (2) யக்ஷகானா (3) கதகளி
(4) பாகவதமேளா (5) தெருக்கூத்து (......)

[பக். 2 ஐப் பார்க்க

**11.** சிங்கள நாடகக் கலைஞர்களாக இருந்து பின்னர், இயக்குனர்களாகப் பரிணமித்த கலைஞர்கள்
(1) தயானந்த குணவர்த்தனா, ரஞ்சித் தர்மகீர்த்தி
(2) சைமன் நவகத்தேகம, ஹென்றி ஜெயசேனா
(3) சுகதபால டி சில்வா, சோமலதா சுபசிங்கா
(4) ஜெரோம் டி சில்வா, ரெஜி ஸ்ரீவர்த்தனா
(5) தர்மஸ்ரீ பண்டாரநாயக்கா, க.சு. சமரகோன் (......)

**12.** நிழற் பாவைகளைக் கொண்டு கதை கூறும் இந்தோனேஷிய நாடக வடிவம்
(1) தோற்பாவைக் கூத்து (2) கொவோக்கா (3) பாகவதமேளா
(4) வயாங்குலிட் (5) புன்றக்கு (......)

**13.** போலந்து தேசத்தைச் சேர்ந்த அரங்கவியலாளர்
(1) குறொட்டொவ்ஸ்கி (2) றிச்சட் செக்னர் (3) மேயர் ஹோல்ட்
(4) ரெனிஸ் வில்லியம்ஸ் (5) பீற்றர் புறூக் (......)

**14.** அரங்கில் ஒளிவிதானிப்பின் முக்கியத்துவத்தினை வலியுறுத்தியவர்
(1) கோடன் கிறைக் (2) ஸ்ரெனிஸ்லாவ்ஸ்கி (3) அடோல்ப் அப்பியா
(4) மக்ஸ் றெயின்கார்ட் (5) எர்வின் பிஸ்காடர் (......)

**15.** பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் 'உடையார் மிடுக்கு' எனும் நாடகத்தை முதன் முதலில் நடித்தவர்கள்,
(1) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள்
(2) மொரட்டுவைப் பல்கலைக்கழக மாணவர்கள்
(3) கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள்
(4) கொழும்புப் பல்கலைக்கழக மாணவர்கள்
(5) பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் (......)

**16.** பாத்திரங்களின் அசைவுகளையும் வர்ண மாற்றங்களையும் காட்ட உதவும் விளக்கு
(1) சுழல் விளக்கு (2) பொட்டொளி (3) பெருக்கொளி
(4) கரையொளி (5) அடிப்பாத விளக்கு (......)

**17.** 1980 ஆம் ஆண்டு 'அபசுரம்' நாடகத்தை வெளியிட்ட நிறுவனம்
(1) நாடக அரங்கக் கல்லூரி (2) நடிகர் ஒன்றியம் (3) கூத்தாடிகள் குழு
(4) மட்டக்களப்பு நாடக சபா (5) அம்பலத்தாடிகள் குழு (......)

**18.** நாடக ஆசிரியரின் உணர்வினைப் பார்ப்போருடன் தொடர்புபடுத்துவதில் பிரதானமானவர்
(1) நெறியாளர் (2) தயாரிப்பாளர் (3) நடிகர்
(4) இசையமைப்பாளர் (5) ஒளி விதானிப்பாளர் (......)

**19.** பின்வருவோருள் இசை நாடக அண்ணாவியார் **அல்லாதவர்**
(1) எம்.வி. கிருஷ்ணாழ்வார் (2) இணுவில் நாகலிங்கம் (3) வைரவி அண்ணாவியார்
(4) செல்லையா அண்ணாவியார் (5) தைரியநாதன் (......)

**20.** 'பபூன்' எனும் பாத்திரம் இடம்பெறும் நாடக மரபு
(1) காமன் கூத்து (2) இசை நாடகம் (3) காத்தவராயன் கூத்து
(4) தென்மோடிக் கூத்து (5) தெருக்கூத்து (......)

**21.** பிரதானமாக ஒலி விளைவுகள் மூலமும் சொல் மூலமும் வெளிப்படுத்தப்படும் நாடக வடிவம்
(1) வானொலி நாடகம் (2) வீதி நாடகம் (3) மேடை நாடகம்
(4) தொலைக்காட்சி நாடகம் (5) ஊமை நாடகம் (......)

**22.** சிலப்பதிகார காலத்துக்கு முன்னர் கூத்து ஆடிய பெண் எவ்வாறு அழைக்கப்பட்டாள்?
(1) தேவரடியாள் (2) மாணிக்கத்தாள் (3) தளிச்சேரிப் பெண்டு
(4) பதியிலாள் (5) விறலி (......)

**23.** இந்தியாவில் 'ராமலீலா' எனும் நாடக வடிவம் ஆடப்பெறும் பிரதேசம்
(1) தமிழ் நாடு (2) ஆந்திரா (3) கேரளா
(4) உத்தரப் பிரதேசம் (5) கர்னாடகம் (......)

**24.** மார்க்கண்டேயன், வாளபிமன் ஆகிய கூத்து நூல்களைப் பதிப்பித்தவர்
(1) சு. வித்தியானந்தன் (2) கா. சிவத்தம்பி (3) சா. இ. கமலநாதன்
(4) வி. சீ. கந்தையா (5) காரை செ. சுந்தரம்பிள்ளை (......)

**25.** '101 வியாதிக்கிழவன்' எனும் பாத்திரத்தை உருவாக்கியவர்
(1) க. சிதம்பரநாதன் (2) அரசையா (3) குழந்தை ம. சண்முகலிங்கம்
(4) கலையரசு சொர்ணலிங்கம் (5) லடீஸ் வீரமணி (......)

[பக். 3 ஐப் பார்க்க

**26.** இடைவெளி, தலைவர் ஆகிய அபத்த நாடகங்களின் ஆசிரியர்
(1) சாமுவேல் பெக்கட் (2) அயனஸ்கோ (3) ஜெனே
(4) ஸ்ரீன் பேர்க் (5) நா. சுந்தரலிங்கம் (......)

**27.** சிங்கள மக்கள் மத்தியிலுள்ள சன்னியக்குமவினது செல்வாக்கைப் பெற்ற சிங்கள நாடக வடிவம்
(1) நூர்த்தி (2) சொக்கரி (3) கோலம்
(4) மினர்வா (5) நாடகம (......)

**28.** கிரேக்க நாடகப் போட்டியில் 13 தடவைகள் முதலிடத்தைப் பெற்ற கிரேக்க நாடகாசிரியர்
(1) ஈஸ்கிலஸ் (2) யூரிப்பிடிஸ் (3) அரிஸ்ரோபேன்ஸ்
(4) மெனாண்டர் (5) சோபோக்கிளிஸ் (......)

**29.** எலிசபெத் காலப்பகுதியில் சேக்ஸ்பியரின் நாடகங்கள் நிகழ்த்தப்பட்ட மேடை எது?
(1) முன் துருத்திய மேடை (2) படச்சட்ட மேடை (3) வட்ட மேடை
(4) சுழல் மேடை (5) அரைவட்ட மேடை (......)

**30.** தமிழ்ப் பண்பாட்டில் பெரும்பாலும் கஜமுகாசுரன் போர்ச்சடங்கு நிகழ்த்தப் பெறுவது
(1) அம்மன் கோயில்களில் (2) பிள்ளையார் கோயில்களில் (3) கிருஷ்ணர் கோயில்களில்
(4) முருகன் கோயில்களில் (5) சிவன் கோயில்களில் (......)

**31.** நாடகமும் அரங்கியலும் என்ற பாடத்தை க.பொ.த. உயர்தரப் பிரிவின் ஒரு பாடமாகக் கொண்டு வருவதற்காக உழைத்த பேராசிரியர்
(1) க. கணபதிப்பிள்ளை (2) சு. வித்தியானந்தன் (3) கா. சிவத்தம்பி
(4) க. கைலாசபதி (5) சி. மௌனகுரு (......)

**32.** பின்வருவோரில் நாடக ஆசிரியர் **அல்லாதவர்**
(1) இ. முருகையன் (2) க. கணபதிப்பிள்ளை (3) நா. சுந்தரலிங்கம்
(4) கலையரசு சொர்ணலிங்கம் (5) இ. சிவானந்தன் (......)

**33.** சமஸ்கிருத அரங்கப் பகுதிகளில் 'ரங்க சிர்ஸ' குறித்து நிற்பது
(1) இசைஞர் அமரும் இடத்தை (2) பிரதான மேடையை (3) பார்ப்போர் கூடத்தை
(4) ஒப்பனை அறையை (5) பிரதான நடிப்பிடத்தை (......)

**34.** சிலப்பதிகாரம் கூறும் அரங்கில் 'கரந்துவரல் எழினி' எனப்படும் திரை
(1) ஒரு புறம் இருந்து வருவதாகும்.
(2) இருபுறமிருந்தும் வந்து நடுவில் இணைவதாகும்.
(3) மறைவாக இருந்து மேலிருந்து கீழிறங்குவதாகும்.
(4) மேடையின் பின்புறம் இருந்து வருவதாகும்.
(5) நிரந்தரமாகத் தொங்கவிடப்படுவதாகும். (......)

More Past Papers at
tamilguru.lk


**35.** "அறிவு, கலை, விஞ்ஞானம், நுட்பம் எதுவானாலும் அது நாடகத்தில் அடங்கவில்லையே. அதற்கு அப்பெயரை இடுவதில் அர்த்தமில்லை" எனக் குறிப்பிட்டவர்
(1) அரிஸ்டோட்டில் (2) பரத முனிவர் (3) அபிநவகுப்தர்
(4) பேர்னாட்ஷா (5) பிளேட்டோ (......)

**36.** படத்தில் காட்டப்பட்டுள்ள ஜெண்டை எனும் மேள வாத்தியம் பிரதானமாகப் பயன்படுத்தப்படும் ஆட்ட அரங்கு யாது?
(1) கதகளி
(2) பாகவதமேளா
(3) குச்சுப்பிடி
(4) யக்ஷகானம்
(5) ஒயிலாட்டம்



(......)

**37.** படத்தில் காட்டப்பட்டுள்ள மத்தள வாத்தியம் எப்பிரதேசக் கூத்தரங்கில் பிரதான வாத்தியமாக இடம்பெறுகிறது?
(1) யாழ்ப்பாணம்
(2) முல்லைத்தீவு
(3) மட்டக்களப்பு
(4) மன்னார்
(5) மலையகம்




(......)

[பக். 4 ஐப் பார்க்க

**38.** படத்தில் காட்டப்பட்டுள்ள பாதை, பிரதான மேடையிலிருந்து பிரிந்து வரும் பாலப்பாதை என அழைக்கப்படும். இது இடம்பெறும் அரங்கு

(1) பீகிங் ஒபேறா
(2) ரஷ்யன் பலே
(3) இந்திய யாத்ரா
(4) ஜப்பானிய நோ
(5) ஜப்பானிய கபுகி



(......)

**39.** பேராசிரியர் சு. வித்தியானந்தன் தயாரித்த நாடகம் ஒன்றில் வரும் ஒரு காட்சி இப்படத்தில் காட்டப்பட்டுள்ளது. அந்நாடகமாவது

(1) இராவணேசன்
(2) வாலிவதை
(3) கர்ணன் போர்
(4) நொண்டி நாடகம்
(5) துரோகிகள்



(......)

**40.** இப்படத்தில் காட்டப்பட்டுள்ளது, ஒரு

(1) சடங்காகும்.
(2) திருவிழாவாகும்.
(3) விளையாட்டு விழாவாகும்.
(4) தெருவெளி அரங்காகும்.
(5) களியாட்டமாகும்.



(......)

* *

[பக். 5 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

නාට්‍ය හා රංග කලාව II
நாடகமும் அரங்கியலும் II
Drama and Theatre II

58 T II

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

※ பிரிவு **A** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பிரிவு **B** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

### பிரிவு A

**1.** (i) ஒத்தெல்லோ நாடகத்தில் இயாகோ பாத்திரத்தின் முக்கியமான **மூன்று** செயல்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் நீர் குறிப்பிட்ட செயல்கள் காட்டும் இயாகோவின் குணாம்சங்களை எழுதுக. (05 புள்ளிகள்)

(iii) ஒத்தெல்லோ நாடகத்தில் இயாகோவின் மறைந்து கிடக்கும் உளப்பாங்கு வெளிப்படும் **மூன்று** கட்டங்களை எடுத்துக்கூறி, விவரிக்குக. (07 புள்ளிகள்)

**2.** (i) இந்திய மரபில் மார்க்க, தேசி ஆகிய நாடக மரபுகளை விளக்குக. (05 புள்ளிகள்)

(ii) திருக்குற்றாலக் குறவஞ்சியில் மார்க்க மரபுகள் வெளிப்படும் இடங்களை உதாரணத்துடன் விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) அலங்காரரூபன் நாடகத்தில் தேசி மரபுகளை இனங்கண்டு விளக்குக. (05 புள்ளிகள்)

**3.** அரங்கில் நடிப்புப் பற்றி பின்வருவோரின் கருத்துக்களைச் சுருக்கமாகத் தருக.

(i) அன்டோனின் ஆர்த்தோ

(ii) ஜேர்சி குறொட்டொவ்ஸ்கி

(iii) ஒகஸ்தாபோல் (03 x 05 = 15 புள்ளிகள்)

### பிரிவு B

**4.** (i) ஈழத்தில் எவையேனும் **இரண்டு** பிரதேசங்களில் பயில்நிலையிலுள்ள கூத்துக்களை இனங்காண்க. (05 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் இனங்காணப்பட்ட கூத்துக்களில் **இரண்டை** பின்வரும் தலைப்புகளில் எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

(அ) பயிற்றுவிக்கப்படும் முறைமை

(ஆ) ஆற்றுகை செய்யப்படும் முறைமை (10 புள்ளிகள்)

**5.** பின்வரும் சிங்கள அரங்குகளுள் ஏதேனும் **மூன்றின்** ஆற்றுகை முறைமைகளை விளக்குக.

(i) தொவில்

(ii) கொகம்பஹுங்காரிய

(iii) தஹ அட்ட சன்னிய

(iv) சரத் சந்திராவின் சிங்கபாகு நாடகம்

(v) தற்காலத் தழுவல், மொழிபெயர்ப்பு நாடகங்கள் (03 x 05 = 15 புள்ளிகள்)

**6.** சமகால ஈழத்துத் தமிழ் அரங்கில்

(i) அரங்கவெளி

(ii) ஆற்றுவோர் - பார்ப்போர் ஊடாட்டம்

(iii) ஆற்றுகை முறைமைகள்

என்பவற்றில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை உதாரணம் தந்து விளக்குக. (03 x 05 = 15 புள்ளிகள்)

* * *